## முப்பெரும் விழா (24/01/2021)

### பெருமை மிகு பிதாமகர் திரு திரஜ்லால் அவர்களின் உரை

நான் எத்தனையோ விழாக்களில் பங்கேற்றுள்ளேன் ஆனால் இன்றைக்கு கிடைத்த மனநிறைவு எனக்கு எப்போதும் கிடைத்ததில்லை .

என்னைப் பாராட்டி பேசினார்கள். அதற்கு எனக்கு தகுதி இருக்கிறதா என்று தெரியவில்லை இல்லாவிட்டாலும் இன்னும் உழைத்து என் தகுதியை மேம்படுத்திக்கொள்வேன் . வாழ்க்கையில் சிலசமயங்களில் ஒரு இடத்தில் உங்கள் வேலை முடிந்துவிட்டது இதை வேறு ஒருவரிடத்தில் கொடுத்து விடுங்கள் என்று சொல்லும் நேரம் வந்து விடும்இனி நான் வேறு ஒரு ரோல் தான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இன்றைக்கு 86 வயதில் என் பிறந்த நாள் விழா கொண்டாடும்போது , என் முன்னேற்றத்தைப் பற்றி அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும். நான் ஏன் வந்தேனென்று சொல்ல வேண்டும். இதற்கு என் மகன் மனோஜ் குமார் மற்றும் மருமகள் அர்ச்சனா மனோஜ் குமார் அவர்களும் தான் முக்கியகாரணம்.எனது மருமகள் அர்ச்சனா மனோஜ் குமார் பற்றிப் பெருமையாக கூறுகிறேன். அவர் பேச மாட்டார் , செய்து காட்டக்கூடியவர். நான் பேசிக்கொண்டுதான் இருப்பேன்.

கல்லூரி ஆரம்பித்து பத்து ஆண்டுகள் ஆன இத்தருணத்தில் தொடர்ந்து கல்லூரியை எப்படி கொண்டு செல்வது என்று கவலையாக உள்ளது.பத்து ஆண்டுகள் **AICTE** யின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துள்ளோம். எங்களுக்கு அட்டோனோமஸ் ஸ்டேட்டஸ் கிடைப்பதற்கான தகுதியில் இப்போது கல்லூரி உள்ளது.அவ்வாறு எங்களுக்கு அட்டோனோமஸ் ஸ்டேட்டஸ் கிடைத்தால் முதல்வர் செல்வராஜ் மற்றும் அவரது டீம் மெம்பெர்ஸ் கல்லூரியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வார்கள் .அதாவது டீம்டு யூனிவர்சிட்டியாக மாற்றிவிடுவார்கள்.

இந்த கல்லூரியை ஆரம்பிக்கும் போது எங்கள் சேர்மன் திரு சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் மகன் திரு வள்ளியப்ப செட்டியார் தான் துவங்கி

வைத்தார். திரு சொக்கலிங்கம் செட்டியார் உண்மையாகவே கல்விக்காக பணியாற்றியவர்

அவரிடம் நாற்பது ஆண்டுகள் செயலர் போல பணியாற்றியுள்ளேன். அவர் அடிக்கடி நிலம் வாங்கிப்போடும் பழக்கம் உள்ளவர். அப்படி நிலம் வாங்க செல்லும் போது அந்த நிலத்தின் மேல் கழுகு பறந்தால் அந்த நிலத்தை வாங்கிவிடுவார் . அவருக்கென்று சில நம்பிக்கைகள் வைத்திருந்தார்.

அவரிடமிருந்து நான் பல விஷயங்களை கற்றுக்கொண்டேன் நான் திரஜ்லால் காந்தி கல்லூரிக்காக நிலம் வாங்க சென்ற சமயத்தில் சேலம் விமான நிலையம் துவங்கப்பட்டிருந்தது.அப்போது மேலே விமானம் பறந்தது என் கண்களுக்கு அது கழுகு பறப்பது போல் தெரிந்தது. உடனே கல்லூரிக்காக நிலத்தை வாங்கிவிட்டேன் அப்போது ஒரு ஏக்கர் முப்பத்தைந்தாயிரம் இன்று ஒரு ஏக்கர் இரண்டரை கோடி.

என்ஜினீயரிங் கல்வி நேற்று இருந்ததைப்போல இன்று இல்லை.

இன்றைய மாணவர்களின் சிந்தனை வேறு விதமாக இருக்கிறது அவர்களுக்கு வாழ்க்கையை புரிய வைப்பது சிரமமாக உள்ளது. சில உணர்வுகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களை திட்டாமல் அன்பால் மாற்ற முயற்சிக்க வேண்டும். அப்துல் கலாம் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை படிக்கும் மாணவர்களுக்கு அது ஒரு திருப்பு முனையாக அமையும்.

இங்கு வந்திருப்பதில் பெரும்பாலானோர் ஆசிரியர்கள். இது உங்கள் கல்லூரி, இதை எந்த அளவிற்கு பயன்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இதனுடைய நிறைகளை எத்தனைபேருக்கு சொல்ல முடியுமோ சொல்லுங்கள், குறைகளை எங்களிடம் சொல்லுங்கள்.
நூற்று அறுபத்தியொரு ரூபாய் சம்பளத்திற்கு சேலத்திற்கு வந்த என்னை இந்த சேலம் இவ்வளவு பெரிய நிறுவனத்திற்கு தலைவராகியுள்ளது அதனால் இது சேலம் மக்கள் கல்லூரி. என்னால் முடிந்தவரை கல்லூரியை இந்த நிலைக்கு கொண்டுவந்து விட்டேன்.உங்கள் அனைவரிடமிருந்தும் விடைப் பெற்றுக்கொள்கிறேன் என்னுடைய ஆசீர்வாதங்களையும் வாழ்த்துக்களையும் உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்